# மனம், மதி (3)

'மதியே, காதல் பற்றி
என்ன நினைக்கிறாய்?' என்று
சும்மா இருந்த மதியிடம்
மெதுவாய்ப் பேச்சுக் கொடுத்தது மனம்;

'காதல்' என்றவுடன்
சற்றே ஆர்வமாய்த்
திரும்பிப் பார்த்தது மதி;

'சரிதான், சுவாரஸ்யமாய்
ஏதோ சொல்லப் போகிறது மனம்'
என்று நிமிர்ந்து உட்கார்ந்தது மதி;

'ஹும், காதல் பற்றிச் சொல்ல
என்னிடம் என்ன இருக்கிறது?'
என்று தொடங்கி வைத்தது மதி;

'காதல் பற்றி ஒன்றும் தெரியாதாக்கும்?
சும்மா கதை விடாதே' என்றது மனம்;

'காதல், கீதல் எல்லாம்
பெரும்பாலும் நீ சம்மந்தப்பட்ட
விஷயம் என்றுதானே
எல்லோரும் பேசிக் கொள்கிறார்கள்'

'காதலுக்கும் எனக்கும்
பெரிதாய் சம்மந்தம் ஏது?'
என்று அழுத்துக் கொண்டபடி
ஓரக்கண்ணில் மனதைப் பார்த்தது மதி;

'சரி, சரி சொல்லப் போவதைச்
சுற்றி வளைக்காமல் சொல்'
என்றது மனம்;

மதி தொடர்ந்தது;

"காதல் உடற்கவர்ச்சி சம்மந்தப்பட்டது;
பருவ வயது சம்மந்தப்பட்டது;
அழகி என்று நீ நினைப்பது சம்மந்தப்பட்டது;
பார்க்க, பழகக் கிடைக்கும்
சந்தர்ப்பங்கள் சம்மந்தப்பட்டது;
பரம்பரை அங்கீகாரம் சம்மந்தப் பட்டது;
சுயநலத்தின் உச்சகட்ட வடிவமானது;"

'என்றெல்லாம் நான் சொன்னால்
நீ ஒத்துக் கொள்ளவா போகிறாய்?'
என்று சொல்லி
மனதைப் பார்த்தது மதி;

கேட்ட மனம் லேசாய்
முறைத்தது மதியைப் பார்த்து;

மனதின் பார்வையை
புரிந்து கொண்ட மதி
சுதாரித்துக் கொண்டு
மேலும் தொடர்ந்தது;

'சரி, எனக்குத்தான் காதலைப் பற்றி
சரிவரத் தெரியாது; நீதான்
காதலைப் பற்றி எனக்குச்
சொல்லேன்' என்றது மதி;

மனம் சற்றே மௌனித்தது;

மதி மீண்டும் தொடர்ந்தது;

"காதல் மென்மையான எண்ணங்கள்
சம்பந்தப்பட்டது;
மெல்லிய இசையின்
இழை போன்றது;
கடுங்கல் மனத்தையும்
மெழுகு போல் உருக வைப்பது;
இளகிய மனத்தையும்
எஃகுப் போல் உறுதியுறச் செய்வது;
தேடிப் போனால் எளிதில்
கிடைக்காதது;
வந்து விட்டால் என்றும்
விட்டுப் போகாதது;
மனிதத்தை மெருகேற்றுவது;
மனதத்தின் ஆதார சக்தியாய்
விளங்குவது"

'என்றெல்லாம் நீ சொல்வாய்;
மேலும் சொல், கேட்டுக் கொள்கிறேன்'
என்று சொல்லி நிறுத்தியது மதி;

தொடர்ந்து மௌனித்த மனதிடம்
'ஏன் மௌனமாகி விட்டாய்
ஏதாவது சொல்லேன்' என்று
தொடர்ந்து கிளறியது மதி;

மனம் முகத்தை லேசாய்த்
திருப்பிக் கொண்டது;

"இப்படிக் கிள்ளியும் விட்டு
தொட்டிலையும் ஆட்டுவதற்கு
ஒன்றும் குறைச்சலில்லை;
காதலைப் பற்றி உன்னிடம்
கேட்காமலேயே இருந்திருக்கலாம்"
என்று முணுமுணுத்த படியே
இடத்தைக் காலி செய்தது மனம்...

அ. சோ
பெங்களூர்
ஆகஸ்டு 2010.